முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.08.2025) கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி பாலு அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தியதை யொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

கணவரும் மகனும்

பொதுவாழ்க்கையில் ஈடுபட உறுதுணையாக இருந்தவர்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மனைவி மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.20-

“கணவரும், மகனும் பொது வாழ்க்கையில் ஈடுபட உறுதுணை யாக இருந்தவர் திருமதி ரேணுகா தேவி பாலு” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகாதேவி பாலு அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி பாலு அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

கணவரும் மகனும் பொது வாழ்க்கையில் ஈடுபட உறு துணையாக இருந்து, தமது அன்பாலும் அரவணைப்பாலும் அவர்களது பணிகளுக்கு ஊக்கமளித்து, அமைதியாக அவர்களது வெற்றியின் பின்னணியாக இயங்கியவர் திருமதி. ரேணுகா தேவி பாலு அவர்கள். அத்தகைய பெருந்துணையின் மறைவு எவராலும் ஈடுசெய்யவியலாத பேரிழப்பு.

அன்னாரை இழந்து தவிக்கும் நண்பர் டி.ஆர்.பாலு, தம்பி டி.ஆர்.பி. ராஜா ஆகியோருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

முதல்வரின் சுதந்திர தின உரை அறிவிப்பு நிறைவேறுகிறது!

‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ திட்டம் - முதல்வர் தொடங்கிவைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

செய்வதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்ட மாவட்ட அளவிளான தேர்வு பணிக்குழு (District level Task Force Committee) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிக்கு தொழில் தொடங்குவதற்கான கடன் ஒப்புதல் வேண்டி பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வங்கிகளால் மேலும் சீராய்வு செய்யப்பட்டு தற்காலிக ஒப்புதல் (Provisional Sanction) ஆணை வழங்கப்படும்.

தொழில் முனைவோர் பயிற்சி

தொழில் தொடங்குவதற்கான வங்கியின் தற்காலிக ஒப்புதல் பெற்றவர்களுக்கு (Provisional Sanction) அரசு செலவில் சென்னை தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் தொழில் முனைவோர் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படும். இறுதியாக தொழில் தொடங்குவதற்கு தேவைப்படும் கடனுதவி சம்பந்தப்பட்ட வங்கிகளால் கடன் இறுதி ஒப்பளிப்பு (Final Sanction of Loan) அளிக்கப்படும்.

வருங்காலங்களில் தமிழ்நாடு அரசு, நிதி நிறுவனங்களுடன் இணைந்து 500 முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

’முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்’ முன்னாள் படைவீரர்களின் தியாகத்தையும் சேவையையும் அங்கீகரித்து, அவர்களுக்கு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதிலும், அவர்தம் குடும்பங்களையும் சமூகத்தையும் வலுப்படுத்துவதிலும் அரசின் உறுதியை எடுத்துக்காட்டுகிறது.

இந்த நிகழ்ச்சியில், மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறப்பு செயலாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் சஜ்ஜன் சிங்ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நெடுஞ்சாலைத் துறை சார்பில்

45 உதவிப் பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.20-

நெடுஞ்சாலைத் துறையில் 45 உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத் துறையில் உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 45 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலைத்துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல் தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலைத் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இது நாள் வரை நெடுஞ்சாலைத்துறை சார்பில் 416 இளநிலை வரைதொழில் அலுவலர்கள், 84 உதவிப் பொறியாளர்கள், 186 உதவியாளர்கள், 139 இளநிலை உதவியாளர்கள், 73 தட்டச்சர்கள், 3 தணிக்கை உதவியாளர்கள், 7 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் நிலை III ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நேரடி நியமனத்திலும், 45 இளநிலைப் உதவியாளர்கள், 3 உதவி வரைவாளர்கள், 9 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர்கள் மற்றும் 36 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் கருணை அடிப்படையிலும், என மொத்தம் 1016 நபர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத்துறையின் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 45 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் நேற்று 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா. செல்வதுரை, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கே.ஜி.சத்திய பிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்) ஆர்.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென்காசி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர்

பா.இராமையா (எ) துரை - இரா.ரேவதி இல்ல மணவிழா!

கழக முன்னணியினர் வாழ்த்து!

குற்றாலம், ஆக. 20-

தென்காசி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், குற்றாலம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவரும், தென்காசி மாவட்ட ஊராட்சி முன்னாள் உறுப்பினருமான பா. இராமையா (எ) துரை - குற்றாலம் பேரூராட்சி முன்னாள் தலைவர் இரா. ரேவதி ஆகியாரின்

புதல்வி இரா.தமிழ்ச் செல்விக்கும், தூத்துக்குடி என். எட்டையா-ஹரிஹர சுப்புலட்சுமி ஆகியோரின் புதல்வர் இ.டி. நவீனுக்கும் திருமண நிச்சயதார்த்த விழா நாளை (21.8.2025- வியாழன்) காலை 10.40 மணியளவில் குற்றாலம் காசி மேஜர்புரம் ஸ்ரீ முருகன் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா 4.9.2025 வியாழக்கிழமை காலை 7.31 மணியளவில் கோவில் பட்டி, கிரீன் லேன்ட் அவென்யூ, இளையரசந்தல் ரோட்டில் உள்ள எஸ். எம்.பேலஸில் நடைபெறுகிறது.

இத்திருமண நிச்சயதார்த்த விழாவில் கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள், ஆன்றோர் சான்றோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டப் பொருளாளர் கேட்சன், அழகியபாண்டியபுரம் பேரூராட்சித் தலைவி ஜெயஷீலா கேட்சன் ஆகியோரது இல்லத் திருமண விழாவில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர், கழக தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், மாநில மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், முன்னாள் எம்.எல்.ஏ. புஷ்பலீலா ஆல்பன் ஆகியோர் கலந்து கொண்டு மணமகன் பொறியாளர் கே.எட்பெர்க், மணமகள் டாக்டர் டி.ப்ரடிலியா ஆகியோரை வாழ்த்தினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

‘இந்தியா’ கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளர் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி!

புதுடெல்லி, ஆக.20-

‘இந்தியா’ கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி போட்டியிடுகிறார். டெல்லியில் ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் ஆலோசனைக்குப் பிறகு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இதை அறிவித்துள்ளார். ஆந்திரா உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் குவஹாத்தி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

2007 முதல் 2011 வரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியில் இருந்தவர் சுதர்சன் ரெட்டி. ‘இந்தியா’ கூட்டணியில் இல்லாத ஆம் ஆத்மி கட்சியும் சுதர்சன் ரெட்டிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. துணை ஜனாதிபதி வேட்பாளராக சுதர்சன் ரெட்டி நாளை வேட்புமனு தாக்கல் செய்கிறார்.

ஜெகதீப் தன்கர் உடல் நலக் குறைவால் தனது துணை ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்த நிலையில் அந்த பதவிக்கு அடுத்த மாதம் 9ந்தேதி தேர்தல் நடக்கிறது. இதில் பா.ஜ.க. கூட்டணி சார்பில் தமிழகத்தைச் சேர்ந்த மகாராஷ்டிர மாநில கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். இந்நிலையில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் யாரை வேட்பாளராக தேர்வு செய்யலாம் என்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி, சி.பி.எம். பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த ராம் கோபால் யாதவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணியின் துணை

ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்ய மல்லிகார்ஜுன கார்கேவுக்கு முழு அதிகாரம் வழங்கி முக்கிய முடிவு எடுக்கப்பட்டது.

நாளை (ஆகஸ்ட் 21) வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி தேதி என்பதால், நேற்று வேட்பாளரின் பெயரை வெளியிட ‘இந்தியா’ கூட்டணி திட்டமிட்டது. அதன்படி இந்தியா கூட்டணியின் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி போட்டியிடுவார் என அறிவித்துள்ளது.